உளி- 1 | ஓசை-61 | ஏப்ரல்-2022 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

ஆசிரியர் : ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி
மதன் குமார்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

அட்டைப்படம் :
திண்டுக்கல் தமிழ்பித்தன்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
✆94893 75575

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

மகிழினி காயத்ரி - 4
ஸ்ரீவாரிமஞ்சு - 5
காயத்ரி ராஜசேகர் - 6
கதிரவன் வீ - 6
தி.கலையரசி - 7
கோ.ஸ்ரீதரன் - 8
ஜே.ஜே.அனிட்டா - 9
ப்ரியா பாஸ்கரன் - 10
ம.சூர்யா திருமால் - 11
செந்தாரப்பட்டி இரா.செல்வக்குமார் - 12
கா வெங்கடேஸ்வரன் - 13
சம்பத் கிருஷ்ண குமார் - 14
பூங்கோதை கனகராஜன் - 14
தங்கேஸ் - 15
க.ராஜகுமாரன் - 15
ந.சிவநேசன் - 16
ஆனந்த குமார் - 17
ரகுநாத் வ - 18
அ. வால்டர் ராபின்சன் - 19
ரத்னாவெங்கட் - 20
கி.சரஸ்வதி - 21
தீபிகா நடராஜன் - 22
காசாவயல் கண்ணன் - 22
சுரேஷ்பாபு ராசேந்திரன் - 23
பிரபுசங்கர் க - 24
நயினார் - 25
மு.முபாரக் - 26
ரா.ராஜசேகர் - 27
ஐ.தர்மசிங் - 28
சரண்யாசத்தியநாராயணன் - 29
முகமது பாட்சா - 29
சிவசந்திரன் - 30
ச.ஜெய் - 31
ஆரூர் தமிழ்நாடன் - 32
கார்த்திகேயன் மாகா - 32
நிலவை பார்த்திபன் - 33
வீரசோழன்.க.சோ. திருமாவளவன் - 34
கோ.லீலா - 35
குளோரிசக்தி - 36
ஜே.பிரோஸ்கான் - 36
கருவை ந.ஸ்டாலின் - 37
கே.பாலன் வடக்கத்தியான்பட்டி - 37
அம்பேத்கர் கிட்டு - 38
சந்துரு ஆர் சி - 39
சௌவி - 39



இறந்து போன
தன் அம்மாவின் சேலைகளையே
அடிக்கடி அணிந்து
கொள்கிறாள் ஒருத்தி

என்னதான்
நிகழ்ந்து விடப் போகிறது
அதனால்
அவள் அம்மாவா
மீண்டும் வரப் போகிறாள்
என்கிறீர்களா
இல்லை அவள்
என்றோ ஊட்டியத் தாய்ப்பாலின் வாசம் சுமந்து
இருக்கும்
அவள் புடவைகள் உரசி உரசி
அம்மாவாகவே மாறத் தொடங்கிவிட்டாள்
இப்பொழுதெல்லாம்

இன்னொருத்தி
தன் அம்மாவின் புடவைகளை
பூஜை அறையின் பெட்டிக்குள் வைத்து
அனுதினமும் தொட்டுப்
பார்த்துக் கொள்கிறாள்

அப்பொழுதெல்லாம்
அவள் அம்மாவின் சொற்களோடு
நினைவுத் தாழிக்குள்
சென்று தன்னை வைத்து
பூட்டிக் கொண்டு
சற்று ஆசுவாசம் செய்து கொள்கிறாள்

பதின்மத்தின் தொடக்கத்திலே
அம்மாவை இழந்த ஒருவன்
தன் மத்திமத்திலும்
இன்னல் வரும் தருணங்களில் எல்லாம்
அம்மாவின் சேலைக்குள்
முகம் புதைத்து
கேவி அழுது கண்ணீரைத் துடைத்துக்
கொள்கிறான்

இப்படித்தான் அம்மா மட்டுமல்ல
அம்மாவின் சேலை கூட
அம்மாவின் சொற்களையும்
அம்மாவின் வாசத்தையும்
அம்மாவின் பரிவையும்
அம்மாவின் கருணையையும்
சுமந்துகொண்டு
அம்மாவைப் போலவே
நடமாடுகிறது
அம்மா இறந்த பிறகும்

உதிர்ந்த இறகொன்று
சுமந்திருக்கும்
பறத்தலின் நினைவுகள் போல

◈ **மகிழினி காயத்ரி**



ஒவ்வொன்றையும் பக்குவமாய்
பார்த்து...பார்த்து
இயற்கை உணவென
கட்டுப்பாட்டு உணவோடு.....

சிறு இடையாய்
நளினமாய்....
அழகு பதுமையாய் வியக்க....
வியர்வை விறு....விறுக்க
உடற் பயிற்சியுமாய்.....

மணவறையில்
செதுக்கிய சிலையாய் மிளிர்ப்பவள்....

எண்ணிரண்டு மாதத்தில்
உண்டாகிப் போன பிஞ்சை
தவக் கோலமாய் பெற்றெடுத்து....

நரம்பில்
ஊறும் அரிப்பையும்....
விரிந்து
தளர்ந்துப் போன தசையின்
சுருக்கத்தையும்....

கனத்துப் போன மார்பில்
உச்சுக்கொட்டி
புசிக்கும் பாலோடு....
பிஞ்சு விரலால் வயிற்றைத் தடவி
பொதிப் பஞ்சு காலால்
சுருங்கிய தசை தடவி
இடும் மருந்தில்....
சுருக்கங்களெல்லாம்
பேரழகாய் தோனுகிறது....

பயத்தம் மாவும்
கஸ்தூரி மஞ்சளும் கலந்து
வாங்கி தாங்கப்பா....
பக்கத்து வீட்டுப் பாட்டி சொன்னா
தோல் பள பளப்பா இருக்கும்னு....
பத்து வயதில் ஆரம்பித்த
அழகு கலை....

ஸ்ரீவாரிமஞ்சு



ஒரு தேர்ந்த மாயாவி
தொடாமல் கை அசைக்க அசைக்க
அசையும் அவனுடைமை
தாளின் அடியில் காந்தம்
நகர்த்த நகர்த்த
நகரும் இரும்புத் துகள்கள்
முழுநிலவு வரும் நாளில் குதியாட்டம் போடும் கடல்
நீ நம் ஊரை அடைந்ததும் நான்.

◈ **காயத்ரி ராஜசேகர்**

எத்தனை துரோகம்
எத்தனை வன்மம்
எத்தனை இரணம்
எத்தனை காதல்
எத்தனை சூழ்ச்சி
எத்தனை இரத்தம்
எத்தனை எத்தனையென அத்தனையும் சுமந்து
அமைதியாக இருக்கிறது நூலகம்

◈ **கதிரவன் வீ**



அங்காடியில்
வரிசையாக
கோபுரம் போல் குவிக்கப்பட்டிருக்கிறது
காய்கறிகள்.

வாடிக்கையாளர்கள்
கூடையில் அள்ளிப் போடும் போது
கீழே விழுந்து உருளும்
ஒன்றிரண்டு காய்கள்
அநாயாசமாகக்
கால்களில் நசுங்கப்படுவதைச்
சகிக்கமுடியாமல்...

சிதறியிருப்பவற்றை
பொறுமையாக எடுத்து வைக்கும் முதியவரின்
மண்ணுக்கும்
அதன் வேருக்குமான பந்தம்
நீர்மமானது என
தீர்மானித்துக் கொள்ளலாம்.

◈ தி.கலையரசி



ராமாயண தோல்ப்பாவை கூத்து
முடிந்த பின்னிரவு வேளைகளில்
தோல்ப்பாவை பொம்மைகளை
எரவானத்தில் செருகிவிட்டு
சித்தூர் நாட்டு சாரயத்துடன்
இலகுவாகுவார் அப்பா;
சொல்லி வைத்தாற்போல
இன்றைக்கு சீதையான
அமுதா சித்தியை
சூர்பனகை அம்மா
ஆயிரம் முண்டைகளிழுப்பாள்.
உச்சக்கட்ட போதையில்
இருவரையும் அடி வயிற்றில்
எத்தித்தள்ளுவார் அப்பா ;
அப்பா தூங்கிப்போனபின்னர்
அம்மா எழுந்து சித்தியையும் தேற்றி
பாதம் இலையில் சோறு கொடுத்து
அவளும் உண்பாள்;
என்ன புரிதலோ அவர்களுக்குள்
மறுநாள் வழக்கம்போலவே
அம்மா சீதாவாய் ஆயிருப்பாள்
சித்தி சூர்பனைகையாகவோ
மண்டதரியாகவோ ஆயிருப்பாள்;
அப்பா ராமனின் தோல்ப்பாவையுடன்தான்
மிச்ச பொம்மைகளையும் ஒன்றாகவே
சேர்த்து செருகுவார்
இதுவரை அவைகளை பிரித்து வைத்தது இல்லை..

**கோ.ஸ்ரீதரன்**



ரசனைகள் தாண்டிய ஓருலகமிருக்கிறது.
அது வெறும் சத்தம்.
வெறும் ஒளி.
வெறும் எழுத்து.

யாரின் பின் யாரெனத் தெரியாத
ஓர் மரணமிருக்கிறது.
அது சௌகரியம்.
மகோன்னத நிலை.
உளத் தவம்.

ஏனெதற்கென்ற வினாக்களற்ற
பதிலிருக்கிறது.
அது வெறுமை.
சித்த பிரம்மை.
கடவுளின் சலனம்.

யாருமேயற்ற அன்பொன்றிருக்கிறது.
அது தற்குறி.
மனச் சிதைவு.
காலக் குருடு.

எதற்கென்றே தெரியாத
வாழ்வொன்றிருக்கிறது.
அது சொர்க்கம்.
வினை லயம்.
பிரபஞ்ச நேர் பிழை.

◈ **ஜே.ஜே.அனிட்டா**

# சலிக்காத மாயத்தின் புதிர்



அடரிருள்
கல்விட்டெறிந்த தேனடை தேனீக்களாய்ச்
சொரியத் தொடங்குகிறது
பனி

நகர வண்டி உப்பெறியக் கரையும்
உறைபனியாய் நினைவுகள்

வேம்பின் கசப்பென
மண்டிக்கிடக்கின்றன சலிப்புகள்

கண்களை இறுக மூடி
அகந்திறக்கிறேன்
மனதின் அடி ஆழத்துள் விழித்திருக்கிறது
கரும் பூனையொன்று

நேச பிஞ்சு விழிகளுடன்
கூர் உகிர் உரசி இதழ் உருட்டலுடன்
நகைக்கிறது
மெல்ல மீசை உயர்த்தி

கணப்பொழுதில்
கனலும் நெருப்பாய் ஒளி
என்னுள்

நிழல் நிஜமாகுமெனப்
பூனையை சுமந்தலையத் தொடங்கி
நெடு நொடிகளாயிற்று

நினைவுச் சுமையோடு
இந்தப் பூனைச் சுமையும் சுமந்தபடி
இன்னும் எத்தனை காதம் நடந்தாலும்
சலிக்காத மாயம் மட்டும்
இன்று வரை
எனக்குப்
புரியாத புதிராய்.

◈ ப்ரியா பாஸ்கரன்



ஆழியில் அசைந்தாடும்
நாவாய் நான்
கண் சிமிட்டி கரம் விரிக்கும்
கலங்கரை ஒளி நீ

காந்தத்தின் தென்முனை நான்
கவர்ந்துகொள்ளும்
வட முனையாய் நீ

மழை நீர் நான்
அருந்தி அரவணைக்கும் வேர் நீ


காற்றிலாடும் கொடி நான்
பற்றிப்படர இசையும் பந்தல் நீ

பனித்துளி நான்
தாங்கும் தளிர் நுனி நீ

கரு நான்
உயிர்ப்பிக்கும் கருவறை நீ

மண்ணில் புதைந்திட
விதையாய் நானும்
பாச வேர்களை பரப்பி
விருட்சமாக வளர உந்தன் நேசமும்
துளிர்க்கிறது காதல்
பச்சையம் பூசி .

◈ ம.சூர்யா திருமால்



மாவு அரைக்கும்
கிரைண்டர்
சத்தம் கேட்டால் கூட
ஆணி அடிக்க கூடாது”
எத்தனை முறை
சொல்லுவது?
கதவைதட்டுவாள் ஓனர்...

யாராவது
உறவுமுறை வந்தா
முன்கூட்டியே
சொல்லுறது இல்லையா
இது என்னா புது பழக்கம்!
மற்றொருத்தி...

மகள்
கிறுக்கும் அழகான
சுவர் ஓவியத்தில்
அ” வரைய
இப்படியா சுவருல
கிறுக்கி வைப்பது!
வெள்ளையடிச்சி
கொடுங்க
இப்போது ஒருத்தன்...

இந்த மூன்று
மாதத்தில்
நான்கு ஐந்து
வீடு மாற்றிவிட்டேன்...

பெரும் சுமையாய்
இருக்கும்
சொந்த வீட்டு
கனவில்
இவர்களை
வேடிக்கை பார்த்தபடி...

◈ செந்தாரப்பட்டி இரா.செல்வக்குமார்



ஆண்டின் முக்கால்வாசி நாட்கள்
உடன் பணிசெய்யும் இஸ்மாயிலோடுதான் வீடு
திரும்புவேன்
வரும் வழியில் அம்மன் மெஸ் மெதுவடை ரொம்ப
பிடிக்கும் அவனுக்கு
ஒன்றை உண்டு இரண்டை பார்சல்
கட்டிக்கொள்வான்.

நான் வழக்கமாக கோவில் செல்வதில்லை
ஒருநாள் மகனின் பிறந்தநாளன்று பக்கத்தில் உள்ள
கோவிலுக்கு அழைக்கிறாள் மனைவி
தங்கச்சி கூப்பிடுது ஒரு எட்டு போய்த்தான் வாடா
என்கிறான்
நீ வரியா சொல்லு சேர்ந்தே போவோம்
கோவிலில் அர்ச்சனை முடிந்து
பூசாரி கொடுத்த விபூதியில் ஒரு சிட்டிகை தொட்டு
நெற்றியில் இடுகிறாள் மனைவி
எனக்கும் இடுங்க என்று வளைந்து கொடுக்கிறான்
இஸ்மாயில்.
மெல்லிதாய் ஒரு கோடிடுகிறாள்
ஆச்சர்யத்தோடு நோக்கியபடி
தங்கச்சி.......!
எல்லாம் இரத்தமும் சதையும்தானே.
பேருதான் வேற மத்தபடி எல்லாம்
மனுஷன் தானே பா..... !
சரிண்ணே சரிண்ணே
வீடு திரும்பியபோது இஸ்மாயிலின் மனைவி
சாஜிதாவும் அவர்களது மகள் பாமினாவும் வீட்டில்
தொலைக்காட்சி
பார்த்திருக்க.
ஒவ்வொரு சானலிலும்
ஒரு பக்கம் ஹிஜாப் பற்றிய விவாதம்
ஒரு பக்கம் ஹலால் பற்றிய விவாதம்
ஒரு பக்கம் ராம ராஜ்ஜியம்
ஒரு பக்கம் ஊழியக்காரரின் புத்துயிர்
ஜெபக்கூட்டங்கள்.
அடபோங்கடா என அலுத்துக்கொண்டு
அடுத்தொரு சானலுக்கு மாற்றிவிட்டு
சன்னலை திறக்கிறேன்
எதிர்புறத்து மசூதியின் கோபுரத்திலிருந்து
சிவாலய கோபுரத்திற்கு இடம்பெயர்ந்து
கொண்டிருந்தது நான்கைந்து புறாக்கள்
இதில் முக்கியம் என்னவெனில்
அந்த புறாக்கள்
அண்ணாந்து பார்க்கவேண்டிய உயரத்தில் இருந்தது.

◈ கா வெங்கடேஸ்வரன்



நள்ளிரவுக்கும் சற்றே
குறைந்த இரவுக்குள்
விரையும்
என் அவசரத்தின்
பதைபதைப்பை
புரிந்தது போலவே
சாலையோரமாகவே நிற்கும்
நாயின் இரண்டு கண்களிலும்
மிளிர்கிறது
அருட்பெருஞ்ஜோதி.

◈ **சம்பத் கிருஷ்ண குமார்**

காற்று தனது இறக்கைகளை
வெட்டிக் கொண்டிருந்தது
அறுத்த மரத்தின்
அடிநிழலில்

◈ **பூங்கோதை கனகராஜன்**



அணிலோடு மூன்றாம் கிளைக்கு
தாவி விட்டிருந்தது மனது
தாவலில்கொஞ்சம்
மஞ்சள் அரளிப் பூக்கள் உதிர்ந்தன
ஒன்றை எடுத்து முகர்ந்து பார்த்தேன் தேன்
சிட்டுகளின் கூரிய
அலகுகள் உள்ளிருந்து நீண்டு
உதடுகளை நிமிண்டின
சிறகுகளை ஏந்திச் செல்லும் காற்றே
மனம் என்பது உனது வாகனமா?
ஒளியில் ஏற்றி பால்வீதியில் பறக்க விடு அந்த
சாத்தானின்
அம்சத்தை என்று
கூச்சலிட்டுப் போனது

◈ தங்கேஸ்

தொண்ணூறுகளின்
அன்புச்செல்விகள் அவ்வளவு அழகானவர்கள் ..

அன்பு என்று கொஞ்சியழைக்கும்
தமிழ்செல்வன்களுக்காக பிறந்தவர்கள்....

வெட்கம் சிவந்து போன தருணம் ஒன்றில்
பிரியத்தின் இலைமறை காயானவர்கள்..

தோற்றுப்போன நேசத்தை
அன்றொரு நாள் புன்னகைத்து தொலைத்தவர்கள்..

தனிமை பொழுதில் ஞாபகம் ஒவ்வொரு பக்கமாக
விரிய பூக்கும்
கார்காலம் அன்புச்செல்விகளுக்கானது...!

அன்பு என்றழைக்கப்படும் அன்புச்செல்விகள்
வசந்தகாலத்திற்கென்று விதிக்கப்பட்டவர்கள்...

◈ க.ராஜகுமாரன்

# புதிய அனிச்சைகள்




பதறிப்போய்
காணாமல் போன அலைபேசியை தேடித்
தடவுகின்றன விரல்கள்
அது சட்டைப்பையில் தான் இருக்கிறது

வெளியே வந்தபிறகும் நிமிடத்துக்கொரு முறை
லைக் கணக்குகளை எட்டிப்பார்க்காமல் தூக்கம்
வராதென்கிறான்
எட்டிப் பார்ப்பதாலேயே
தூங்காமல் இருப்பவன்

அரிதாக செய்தித்தாள் புரட்டுகையில்
சர்ச்சைச் செய்தியை வாசித்த மறுகணம்
கமெண்ட் பாக்ஸை கீழே தேடி
வெட்குகிறான் ஒரு கணம்

திடீர் வருகையை
உபசரித்தப் பின்
'போன் பண்ணியிருக்கலாமே'
என்ற வார்த்தையும்
ஒட்டிக் கொள்கிறது
புதிய அனிச்சையாய்.

ந.சிவநேசன்



அமிலங்கள் தெறிக்கும்
அகங்கார பார்வைகள்
அழித்து விட முடியவில்லை
பிரியங்களின் வேர்களை..

இருத்தலையுணர்த்தும்
நினைவுகள் நான்கு பக்கமும்
பரவி விருட்சமாய் வளர்ந்து
உன் உடம்பை வளைத்து
நரம்புகள் நொறுக்கப்படலாம்..

இலக்கணங்களுக்குள்
அமராத கவிதையாய் உன்னை
மறக்க விடாமல்..குத்தி கிளறி
வலிகள் சுமக்க கட்டளையிடலாம்..

ஆழ்ந்த குறிப்புக்கள் அடங்கிய
என் வயலின் இசை
இடைவிடாது உன் திசுக்களுக்குள்
அமர்ந்து ஆலாபனை செய்யலாம்..

உன் அலட்சிய புன்னகைகள்
புகைகளாய் மாறி
என் நுரையீரல் தின்று விட
வாய்ப்பில்லை..

என்றாலும் வாழ்ந்த காலங்களுக்குள்
திரும்பவும் அமர்ந்து கொள்ள
என்றாவது வருகையில்..
இலையுதிர் காலமென
வானிலை அறிவிக்கலாம்...

நானும் அலட்சிய பனித்துளியை
சொந்தமாக்க தீவிர முயற்சி செய்கிறேன்.. பிரிய
ஆதவன் முன்
அவை நொடிகளில் சிதறி உருகுகின்றன..

என் உயிர் எழுத்துக்கள்
உன் மெய் தீண்டலில்களில்தான்
அர்த்தங்கள் உமிழ்கின்றன..

◈ **ஆனந்த குமார்**

# பட்டாம்பூச்சியின் இயற்பியல்



வரையறுக்க முடியா
கோணம் ஒன்றை
அட்டவணையின்
பிற்பகுதியில் இணைத்து
‘முக்கோணவியலை
இயற்பியலாக்கும்
சிறுமுயற்சியில் நான்’

கணிதச் சூத்திரங்களை
இயற்பிலாய்
விரிக்கயியலாது
என்றறிகையில்
மாலை நேரத்து
பட்டாம்பூச்சியொன்று
தன் ஒழுங்கற்ற
முக்கோண இறகை
மடக்கியும் விரித்தும்
இயற்கையின்
சமன் புரிகிறது

முதுகுச்செடியினை
மெல்லச்சாய்த்து
மனமொட்டின்
முக்கோண முனைகளில்
அதனைத் தேனெடுக்க அனுமதிக்கிறேன்

கண்ணிமைத்து
தாய்மையினை
உணரும் பொழுதினில்
நான் தேடிய வண்ணச்சூத்திர
இணையட்டவணை

ஒரு முக்கோணவியல்
தத்துவத்தினை
இயற்பியலின்
சூத்திரங்களோடு
பொருத்தி வருகிறேன்

என் ஆன்ம
ஆழத்திலிருந்து
மெதுவாய்
மேலெழும்புகிறது!

◈ ரகுநாத் வ



அன்னாடங்காய்ச்சிகளும் மாத
வருவாய்க்காரர்களும் நிரம்பிப் பறக்கும் மின்
இருப்பூர்திகளை அன்றாடம் தன் வரங்களாலும்
வாழ்த்துகளாலும் நிரப்புபவள் அவள்

நேர்த்தியான சேலைமடிப்புகளோடு
அடர்த்தியான உதட்டுச்சாயம் பூசியபடி
எதிர்ப்படும் யாவரிடமும் மையிட்ட கண்களால்
கருணையைப் படற விடுபவள் அவள்

கைம்மாறுகளுக்காக காத்திராமல் அனைத்து
தலைகளின் மீதும் தன் மென்கரங்களை
பதிப்பவளின் வாழ்த்துகளை..
சில தலைகள் தாழ்ந்து ஏற்கின்றன
பல தலைகள் திசை திருப்பிக் கொள்கின்றன

சில்லரைக்காக
இருப்பூர்திப் பெட்டிகளை ஒவ்வொன்றாகக் கடக்கும்
அவளது கரங்களில்
அவளைக் குறித்த எள்ளல்களும் ஏளனங்களும்
வருவாய்க்கு அதிகமாய் வந்து விழுகின்றன

விழநீர்த் திரள
கடைசிப் பெட்டியை நெருங்குகையில்
' குறி அறுத்த பின்பும்
இன்னும் வேறு எதை அறுத்தல் தகும்? ' என
வினவுபவள்...

தன் இருப்பின் நியாயத்தைத் தெறிவிக்க
பிற்போக்குக் கூட்டத்தை நோக்கி நிலம் அதிர
கரங்களைத் தட்டுகிறாள்

அவளது கரவொலியில்
அவளைச் சுற்றிய பிணைகளும்
மூடத்தனங்களும்
பிற்போக்குகளும்
ஒவ்வொன்றாக நொறுங்கி விழத் துவங்குகின்றன

சற்று பொறுங்கள்...

' ள் ' எனும் பெண்பால் விகுதிக்குள் றெக்கை
விரித்தபடி நுழையும்
ஒரு தேவதையை
கண்கள் குளிர
ரசித்துக் கொள்கிறேன்.

◈ அ. வால்டர் ராபின்சன்



## ஒரு பறவையென மாற்றிடு

எத்தனையோ ஜென்மங்களென
விடாது தொடரும்
காரணம் ஏதுமற்ற பிரார்த்தனையை
கூட்டி வைக்கிறேன்

இழந்த சிறகுகளை
எண்ணுவதில் பலனில்லை
அறிவேன்
உதிரப் போவதெனப்
போக்குக் காட்டுகிறவையும்
பயனில்லை
அதையும் அறிவேன்

வீழ வீழ முளைக்கும்
வாதைகள் சில
மேலெழும்புவதைத் தடை செய்வதென
இனி நம்புவதற்கில்லை

உந்திப் பறப்பது
எனதானது
தத்தளித்து உயர்வது
எளிதுதான்

அன்பெனும் பெயரில்
கூண்டைப் பரிசென
அளிக்கிற
முகங்களைப் பார்க்க வேண்டாம்
அந்தக் கரங்களை
கூடுமான வரையில்
தரிசிக்க வேண்டாம்

இலக்கென்ற ஒன்றை
வரையறுத்தால்
வட்டத்திற்குள்
சுழலும்படி ஆகலாம்

திரும்பிடத் தேவையொரு
கூடென்னும் எண்ணமற
எல்லையற்ற வெளி
எனதாகட்டும்

ஏதோ ஓர் அடர்ந்த வனத்தில்
உயர்ந்த மரத்தில்
வளைந்தாடும் கிளை போதும்
இராத் தங்க

என் இறையே
மறுபோது எதுவெனும்
கேள்வியற்ற ஒரு பறவையென ....

◈ ரத்னாவெங்கட்

# உறைந்த நிழல்கள்



சாலை விரிவாக்கமென்றவாறு
மீப்பெருப் பற்சக்கரங்கள்
கடித்துத் துப்புகின்றன
பெருமரங்களைக் கரும்பென...

வயதைப் பற்றிய குறிப்பைச் சொல்லும் வட்ட
வளையங்கள்
புலப்பட வண்டியிலேற்றப்படும்
பச்சைமரத் தண்டுகள் விட்டுச் செல்லும்
நினைவுகளில்
உறைந்துள்ளன எண்ணிலடங்காக்
கூடுகளும் உழைத்துக் களைத்த உடல்கள்
இளைப்பாறிய வியர்வை நேரங்களும்

◈ கி.சரஸ்வதி




நம்புங்கள்
சுதந்திரத்தை விரும்புபவள் நான்.
இறக்கை முளைத்த என் கிளிக்கு
பெரிதாய் ஒரு கூண்டும்
ஓடிவிளையாடும் என் நாய்க்கு
நீளமாய் ஒரு சங்கிலியும்
கொடுத்திருக்கிறேன்.

◈ **தீபிகா நடராஜன்**

வெட்டப்படும்
ஆட்டின் இரைப்பையில்
கடைசியாய் கடித்த
இலைதழைகள்
சைவத் துகள்களாய்.

◈ **காசாவயல் கண்ணனன்.**

பேசும் ஏடுகள்



இடைப்பட்ட ஏடுகளில்
நாசியை நுழைக்கையில்
எனக்கென
மீதம் வைத்திருக்கிறது
சற்றேனும்
சுவாசக் காற்று

சில ஏடுகள்
புத்தம் பேசுகிறது
சில ஏடுகள்
ரௌத்திரம் கொள்கிறது
சில ஏடுகள்
சறுகுகளை சுமந்து செல்ல,
மறு ஏட்டில்
அலைகள் ஆர்ப்பரிக்கிறது

சில ஏடுகளில்
வல்லூறுகள் வட்டமிட
மறு ஏட்டில்
தன் குஞ்சுகளை
சிறகுகளுக்குள்
ஒளித்து வைக்கிறது
தாய் பறவை

சில ஏடுகளின்
நிழல்களில்
உறங்கிக் கொண்டு
ஓய்வெடுக்கிறார்கள்
மரம்வெட்டி
களைத்தவர்கள்

மரங்களின் மறுபிறவி
புத்தகங்கள்

அவைகள் தூவிய மலர்கள்
ஏடுகள் முழுவதும்
சிதறிக்கிடக்கிறது
எழுத்துக்களாய்

தோய்ந்த எச்சங்கள்
காய்ந்த இறுதி ஏட்டில்
இப்படித்தான்
பதியமிட்டு இருந்தது

மரம் வளர்ப்போம்.!!
மழை பெறுவோம்.!!

சுரேஷ்பாபு ராசேந்திரன்

# சுண்டு விரல் காவியம்



■

கைத்தலம் பற்ற கனா கண்டது யாரோ??
அம்சமாய் கோர்த்துக் கொண்டது
நம் சுண்டுவிரல்கள்.....

■

சுண்டு விரலா??
சீண்டும் விரலா??
பட்டிமன்றம் வையுங்களேன்
காதல் வெளியில்......

■

உன் புருவ ரோமங்களை
சமநிலைப்படுத்த  உருவானதா
என் சுண்டு விரல்??

■

உன் சுண்டு விரலை
பிடித்துக் கொண்டு
நடை பழகும் குட்டி மகனுக்கு
நடை வண்டி எதற்கு??

■

கோவர்த்தன மலையை
குடையாக தாங்கியதும்
இராதையின் பிடி சற்று இறுக்கமானதும்
வலியென்று அலறியதும்
அதே சுண்டுவிரல் தான்.....

■

மோதிரங்கள் மிதமிஞ்சி போகையில்
நான்காம் விரலுக்கு
தங்கையாக மாறிவிடுகிறது
சுண்டு மோதிர விரல்.....

■

கீழ் இரப்பைக்கு
மையிட தோன்றிய
குட்டி தூரிகையா??
சுண்டு விரல்....

■

முத்துப்பற்கள் பூட்டிய சிறைக்குள்
சிக்கித்தவிக்கும் சுண்டுவிரலை
நாணத்தின் சின்னமாக
அறிவித்து விடலாமா ??

■

மொத்த காமத்தையும்
ஒற்றை நகக்கண்ணில் சேமித்து
உன் மேனியை தீண்டும்
மன்மத விரல்.....

■

அப்பா...சூச்சூ...
சுண்டு விரலை
உயர்த்தி சிணுங்கும்
மகளின் பாவனையில்
ஆயிரம் வானவிற்கள்.....

◈ பிரபுசங்கர் க



அழகிய தம்பதியினர்
என்று சொல்கிறார்கள்
அற்புதமாக நடிப்பது
நானா அவரா தெரியவில்லை

அத்தனை பிரியமா
உங்களோடு எப்போதும்
கூடவே வருகிறாரே
என்று கேட்பவர்களுக்கு
ஏமாற்றிவிடுவேனோ
என்ற சந்தேகம்
அவர் கூடவே வருகிறது
என்று எப்படிச் சொல்வேன்.

உங்கள் பாதுகாப்பிற்கு தானே
வருகிறார் என்பார்கள்
இல்லை என் சுதந்திரத்தை
பாதுகாக்க வருகிறார் என்று
பெருங் குரலெடுத்து
சொல்ல வேண்டும்போல இருக்கிறது

ஜோடிப் பறவைகள் என்று
புகழும்போது
புழுவாகத்தான் நெளிகிறேன்
உங்கள் தவறல்ல
சிறகுகள் இல்லாத பறவையாக
நான் காட்டிக்கொண்டதில்லையே

அது சரி..என்னோடு அவரை
இணைத்து பேசுகிறீர்களே
அவரை என் கணவர்
என்றா நினைத்தீர்கள்
மன்னிக்கவும்..
அப்படியெல்லாம்
என்னால் சொல்ல முடியாது
அவருக்கு நான்
மனைவி அவ்வளவுதான்

◈ நயினார்



காசில்லாத போது கேட்கப்படுகிறது
கொடுத்த கடன்,
பசியில்லாத போது தரப்படுகிறது உணவு,
சோர்ந்து போன நேரங்களில்
திணிக்கப்படுகிறது,
கடினமான வேலை,
அவநம்பிக்கையில் வாழும்
போது நிகழ்கிறது துரோகம்,
நம்மை நமக்கே பிடிக்காத
போது
செலுத்தப்படுகிறது புது புது
குற்றம்,
கையில் குடையில்லாத போது
ஓயாமல் பெய்கிறது மழை,
ஆறுதல் தேடி அலைகின்ற போது,
அழுகின்றது பச்சிளம் குழந்தை,
கையிருப்பு குறைவாகயிருக்கும் போது
அதிகரித்திருக்கிறது விலைவாசி,
இன்றோ நாளையோயென உயிருக்கு
போராடிக்கொண்டிருக்கும் போது நிகழ்கிறது...
இயற்கைச் சீற்றம்,
எப்படி இக்கவிதையை முடிப்பதென
திணறிக்கொண்டிருக்கும் போது தொடர்கிறது ...
பேனாவின் மௌனம்!

◈ மு.முபாரக்



“என்னை மறந்துவிட்டாயா?”
இருபாலரிடமும் எழுந்துயரும் ஐயம்

என்ன சொல்ல?

புத்தகப் பை சுமந்த
தோள்

கசிந்த மை ஒட்டிய
கட்டை விரலொட்டிய
முதல் மூன்று விரல்கள்

கல் இடித்தபோது கால்விரலில்
தெள்ளித் தூவிய மண்

நீலம்போட்ட வெள்ளைச் சட்டையின் காய்ந்த மணம்

பள்ளிப் பாதைகளில்
உதிர்ந்துகிடந்த மரச் சருகுகள்
இலந்தை வடை
கார நெல்லிக்காய்
பப்பாளிக் கீற்று
ஐந்துபைசா ஒட்டித் தந்த குச்சி ஐஸ்
வாட்ச் கட்டிய ஜவ்மிட்டாய்
இன்னபிற

எதுவும் இனியும் வாய்ப்பில்லைதான்

இருந்தும்
கண்களுக்குள்ளும் மனசுள்ளும்
இன்னும்
அதே பால் வெளிச்சத்தில்தானே எல்லாமே
பள்ளி சென்றபடியே

◈ ரா.ராஜசேகர்



அழகான நீள முடி
கவர்ச்சிகரமான குரல்
அச்சுறுத்தும் உயரம்
நன்றி தெரிவிக்கும்
உன்னத அன்பு
வார்த்தைகளுக்கு கீழ்படியும்
வசீகர பண்பு “
நண்பன் ஒருவனின்
அலங்கார வார்த்தைகளில் மயங்கி
அதிக விலைக்கு வாங்கினேன்
ஒரு அதிசயமான நாய்

முதலில் பணிவு காட்டியது
மெதுவாகக் குரைக்கத் துவங்கியது
உறுமலோடு மிரட்டத் துவங்கியது
மென்மையாகக் கால்களை
கவ்வத் துவங்கியது
குறுகிய நாட்களில்
என்னிடமே திரும்பியது
பிறரிடம் காட்டி வந்த சேட்டைகள்

நாளுக்கு நாள் வளரத்துவங்கியது
அதன் மென்மையான வால்

அடிக்கடி
எனது செவித்துளைகளில்
வாலை நுழைத்து
தூக்கத்தை தொலைத்தது

நாசித்துவாரங்களில்
வாலை நுழைத்து
வெளியேறும்
தும்மலை ரசித்தது

திறந்த வாயில்
வாலை நுழைத்து
சுவாசத்தை திணற வைத்தது

இமைகளை மெல்ல விரித்து
வாலை நுழைத்து
கண்ணீரை கரைய வைத்தது

வாலை ஒட்ட நறுக்கியே
ஆகவேண்டிய நிர்ப்பந்தம்

பல தடவை கூராக்கினேன்
கத்தி முனையை
பதுங்கிக் கொண்டது

நண்பனை துணைக்கழைத்தேன்
அவனது இரத்தத்தை
ருசி பார்த்தது

பலத்தை பெருக்க
பலரிடம் பேரம் பேசினேன்
ஆளுக்கொரு காரணத்தோடு
தப்பித்து ஓடினார்கள்
வாலின் நீளத்தை பார்த்து
மிரண்டவர்கள்

அதன் விழிகளை சந்திக்கும்
போதெல்லாம்
கொலைவெறியோடு
நான்

என்னை முகமுகமாக சந்திக்கும்
போதெல்லாம்
நக்கலான ஓரப்பார்வையோடு
நாய்

அழகுக்கு மயங்கினேன்
அதற்காக இப்படியா?

அறிவாளித் தனம் இல்லை
என்பது மட்டும் புரிகிறது
நானே வலைவிரித்து
நானே சிக்கிக்கொண்டது...

ஐ.தர்மசிங்



வாசலின் இரும்பு கதவு
கீச்சிடும்படி திறந்து
அவிழ்ந்த தலை பின்னலுடன்
வீடு நுழைந்த மகள்..
புத்தக பையினை இடமறியாமல்
இறக்கி வைத்து
பொத்தென்று சோபாவில் உட்கார்ந்தாள்..
தண்ணீர் தந்து பின்னலை சரிசெய்ய
அருகில் அமர்ந்த அம்மாவிடம்
கண்களை விரித்தும்
சுருக்கியும்
நாள் முழுவதும்
பள்ளியில் நடந்ததை ஆர்வமாக
சொல்லிக் கொண்டிருந்தாள்..
மகளை ரசித்தபடி பார்க்கும்
அம்மாவிற்கு இப்பொழுது மகளின்
பாட்டியின் சாயல்..
பாட்டியின் மகளை தான்
தற்சமயம் அவள் ரசித்துக்கொண்டிருக்கின்றாள்.

◈ சரண்யாசத்தியநாராயணன்

கடும் மழைக்குள்
காண் அறையைக்கட்டிக் குடியேறுகிறேன்...
உன் சகவாசம் நொம்பரமானது!
நீயளிக்கும்
வெந்நீர் குளியலில் வழுக்கிவிழும் வழலைக்
கட்டியில்
என் பிம்பம்!
என்னைப் பிரித்து இடம் மாற்றப் பார்க்கிறாய்!
பாலையை நெய்யும் நெய்தலில்
உன்னைப் பயிர் செய்யும் விவசாயிக்குப்
போகங்களின்
கணக்குத் தவறிப் போவதில் என்ன ஆச்சரியம்?
நேற்று துவைத்த மனசை
இன்று உடுத்திக் கொண்டு சென்றாலும் கொஞ்சம்
அழுக்கு
இருக்கத்தான் செய்கிறது....
ஆகாயத்தில் படிந்த கறையென்ன நிலவா!

◈ முகமது பாட்சா

# கதவுடுவோம்



கடைகளுக்கு தூபம் போடும் பாய்
அன்று முதலில் பிள்ளையாருக்கு தூபமிட
மகிழ்ந்த பிள்ளையாரோ
பாய் என்ன வரம் ?வேண்டும் என்றார் !

வேறென்ன சாமி" அல்லாஹ்வை" பார்க்கனும்
சட்டென்று இல்லாமல் போன விநாயகர்
குரல் மட்டும் கேட்டது அன்வர் நான் உன் கூடவே
இருக்கேன் எல்லாமுமாக
அல்லாஹ் பேச தொடங்கினார்'

மகிழ்ந்த அன்வர் கண்களில் கண்ணீர் துளிர்க்க
சட்டென்று இயேசு உருப்பெற்று வந்து
கொண்டிருந்தார்
ஆணியடித்த கைகளில் இன்னும் காயம் இருந்தது
எல்லா ஆணியும் ஒன்றுதான்
என புன்னகையுடன்.

◈ சிவசந்திரன்



காற்றின் மதகில்
கண்ணீரை அடைத்து
தவறியும் வழிந்து விடாமல்
உள்ளுக்குள்
திருப்பிக்கொண்டிருக்கிறேன்
என் கைகளை நக்கி
மொத்த முத்தங்களையும்
கொடுத்து கூச செய்த
நாய்க்குட்டி
இரண்டு நாளாய் சுகமின்றி
மெலிந்து விட்டது
எதை எதையோ யோசித்து
இதைப்பற்றிய யோசனையை
தவிர்க்கப்பார்த்து முடியாமல்
அதைப்போலவே
முணகிக்கொண்டிருக்கிறேன்
எல்லா சிகிச்சைகளுக்கும்
மசியாதததது
உயிர் முனையில் நின்றிருக்கிறது
அதனை கெட்டியாக
பிடித்துக்கொண்டு
சொட்டு சொட்டாய் நீர் விடுகிறேன்
அதற்கு பிடிக்குமென
கறித்துண்டுகளை போடுகிறேன்
முகத்தை திருப்பிக்கொண்டு
நிற்கிறது
என்ன செய்வதென்று
தெரியவில்லை
இனி அதன் விருப்பம் தான்

◈ **ச.ஜெய்**



மருதாணி
சிவந்தது
அவள் கை பட்டதும்.

◈ **ஆரூர் தமிழ்நாடன்**

தாமரை மொட்டொன்று ப்ரீ ஹேரைக் காற்றுக்குத்
தின்னக்கொடுத்து விட்டு உதட்டுச் சாயம் பூசிக்
கொண்டு இருக்கிறது இந்த நள்ளிரவில்
பார்பிடால் போல சாய்ந்து நிற்கிற அழகைக்
கண்களால் அள்ளிக் குடிக்க
கடல் உயர்ந்தெழ
இரவின் நிறத்தை ஒரு பந்தாக்கி கடலின்
காமத்திற்குத் தந்துவிட்டு
உன்னோடு
நித்திலப் பந்தற் கீழ் நீணிலாப் பாயலின் மேல்
இச்சென்ற அரவந் தவிர்த்து கத்திடாமல் காதல்
செய்தேன் .
நீயோ கடைசிவரிக்கு “அர்த்தம் எமிட்டி அர்த்தம்
எமிட்டி “ எனச் சுந்தரத் தெலுங்கினில் கேட்டுக்
கொண்டிருக்க
நான் மீண்டும் முதல்வரியைத் தொடங்குகிறேன் .

◈ **கார்த்திகேயன் மாகா**



"அடுத்த புள்ள ஆம்பளப் புள்ளதேன்"
அடிச்சு சத்தியம் பண்ணாக
அரசபட்டி சோசியரும்
கோடாங்கித் தாத்தாவும்

இப்ப மகளுக்கு
பொம்பளப் புள்ள பொறந்தும்
அடுத்த மக கல்யாணத்துக்காக
அங்கனதான் போயி நிக்குறாக
சாதகத்தத் தூக்கிட்டு
பாண்டியம்மாளும் அவ பட்டாளத்து புருசனும்!

சகுனஞ் சரியில்லன்னு
நல்ல காரியத்துக்கு புறப்பட்ட
நாகராசு மாமாவ
மக்யா நாளு போகச் சொன்னாரு
மாரியாத்தா கோயில் பூசாரி!
மக்யா நாளு மதியான பஸ்ஸு
மரத்துல மோதுனதுல
மண்டை பொளந்துருச்சு மாமாவுக்கு!

அடுத்து எந்த திசையில
வைத்தியத்துக்கு போறதுன்னு
புருவம் வரைக்கு கட்டோட
பூசாரிட்ட போயி நிக்குறாரு மாமா!

வாஸ்துகாரவக ஒன்னுக்கு ரெண்டு பேர கேட்டு
பாத்து பாத்து கட்டுன
புது வீட்ல
பத்து மாசமா பயங்கர சண்ட!

வடக்குப் பக்கம் வாசல மாத்துனா
எடக்கு எதுவும் வராதுன்னு
வாஸ்துக் காரன் சொன்னத நம்பி
மறுபடியும் வாசல பேக்குறாரு
மலேசியாவுல இருந்து வந்த மருதமுத்து!

பெருசா நாலு ஹோமம் வளத்தா
பெரிய ஆளா ஆயிராலாம்னு
பெருமாள் கோயில் அய்யரு அவக
பங்காளிகளோட வந்து
புகையடிச்சிட்டு போன
நாலே வாரத்துல
ஹோமம் வளத்த இடத்துக்கு நேர்மேல
தூக்கு மாட்டிச் செத்துப் போச்சு
தமிழ் வாத்தியாரோட
தங்கச்சி மக!

இப்ப தீட்டுக் கழிக்க
திரும்பவும் ஒரு ஹோமம் வளக்க
தாயாராகிட்டு இருக்காரு
தமிழ் வாத்தியாரு!

"சாங்கியம் சடங்க எல்லாம்
செத்த நாளைக்கு கெடப்புல போட்டுட்டு
மனசுக்கு சரின்னு படறத மட்டும்
செஞ்சு பாருங்கடா
முட்டா பய மவனுங்களா"ன்னு
தண்ணியப் போட்டு வந்து
பஞ்சாயத்துக்கு நடுவுல சலம்புன
கீழத்தெரு மணிகண்டன் மேல
இப்ப பிராது குடுத்துருக்கு
முக்காவாசி ஊருசனம்!

நாளைக்கு சாஸ்தா கோயில்
சாமியாடி சொல்றபடி
தண்டன குடுக்கப் போறாக
அந்தத் தறுதலப் பயலுக்கு!

◈ **நிலவை பார்த்திபன்**



எப்போதும் மூன்று மைல்கள்
தாண்டியே படிப்பு வாசம்
அறிய வேண்டிருந்தோம்
அப்போதெல்லாம் ஒற்றை சாலை
எப்போதோ வரும் இருசக்கரங்களை
அண்ணாந்து பார்த்திருப்போம்

வயல்வெளிகளில் சாக்குப்பையில்
புத்தகங்கள் தாங்கி எண்ணெய் வழிய
இரு ஊரை தாண்டி பஸ் பிடிப்போம்
ஆறாம் வகுப்பு படிக்கச்செல்ல
இடையிடையே எலுமிச்சை மரங்கள்
அவைகள்தான் ஆறுதலாகியிருக்கும்

காலங்கள் மாற ரோடு ரோலர் பார்த்து
மனசெல்லாம் பேருந்துக்கனவு
கால அட்டவணையில் இரு நேரமென
நிர்ணயமாக நடராசாவே துணையானது

தாத்தா வாங்கி தந்த குட்டை சைக்கிள்
உலகத்தை கைக்குள் கொணர
பள்ளி கல்லூரி கழகமென மாறுதலாக
மாறாத தாயாய் உணவு கொடுத்தது
நாங்கள் கடந்து வந்த நிலங்கள்

வேலையாக நெடுஞ்சாலையில் கிடைக்க
வாழ்க்கையோ வசந்தமாக
வீடுகள் மாளிகையாக
குழந்தை மகிழுந்தில் காற்றாக
வானவெளியில் நான் பறக்க
வசதி செய்திருந்தது சோற்றின் கருப்பை

மனசெல்லாம் நகராசேபம் வீற்றிருக்க
உடன்பிறந்தார் ரியல் எஸ்டேட் ஓனராக
மூன்றுபோக நிலம் மூர்ச்சையற்று
மால்களால் நிரம்பி காற்றாடியிருக்கிறது

வானத்தில் பறக்க ஆசையான மனம்
விவசாயம் செய்ய மரத்துப்போனது
ஆறுகள் குளங்கள் பாதையை மறக்க
ஆலமரம் வேப்பமரம் வேரையிழக்க
பச்சை வயல்வெளிகளும் தோப்புகளும்
மனிதர்களைக் காண ஏங்கியது

மனிதன் பிளாஸ்டிக் அரிசிக்குள்ளும்
மாத்திரைக்குள்ளும் நுழைந்திருந்தான்..!

◈ **வீரசோழன்.க.சோ. திருமாவளவன்**



மௌனம் முடிவெனில்
நினைவுகளின்சிறகுகள்
அதை துடைத்து விடுகின்றன

வெளியில் சிந்தாத
என் கண்ணீரில்தான்
நனைகிறது சூரியன்

உதிரும் உன் புன்னகையின்
ஒளியில்தான் ஒளிர்கிறது
வளர்நிலா

நாம் வாங்க வரவில்லை
வழங்கதான்நிற்கிறோம்
நாமே அறிந்திராத நம்மை
என்னவென்று வழங்குவது...

எளிதில் கிடைத்துவிடமுடியாத
ஒன்றைதான் ஒருவருக்காக ஒருவர் கையிலேந்தி
நிற்கிறோம்

பெயர் சூட்டப்படாத அந்த ஒன்றுதான்...
முட்டல்களுக்குப்பின் துளிர்க்கும்
உரிமை வசவுகளின் நறுமணமாகிறது.

சிரிப்பும் அழுகையுமாய் கசியும்
கண்ணீரில் நிலவைவிடவும்
ஒளிரும் நட்சத்திரமாகிறது.


முரண்களின் முட்டல்களிலும்
வெட்கமற்ற சிரிப்பிலும்
வெட்கத்தை மறைக்கும்
முறைப்பிலும் வளர்கிறது

உங்கள் தோட்டத்தில் அதற்கு
என்ன பெயர் சூட்டி இருக்கிறீர்கள்?
என கேட்கப்போவதில்லை

அன்பாலான எதற்கும்
வைத்துவிட முடிவதில்லை
முற்றுப்புள்ளி...

பெயரற்று போனாலும்
மலர் மலர்தானே...

◈ **கோ.லீலா**



நிலத்தின் மௌனம்**

அந்த நிலம்
தன்னை அகழ்ந்தபோது
மௌனமாய்ப் பிரசவிதததது
பசுமையை!
அந்தநிலம்
தன்னை ஆழ வெட்டியபோது
சலசலவெனப்
பிரசவித்தது
நீரூற்றை!
அந்த நிலம்
தன்னை வெட்டிச்
செம்மைப்படுத்தியபோது
சத்தமின்றிச்
சிரித்தது எழில்சுமந்து!
அந்தநிலம்
தன்மீது அணுகுண்டைத்
தாங்கியபோது
தன் கருவறையைக்
கல்லறையாய் மாற்றியோரை
பழிவாங்கக் காத்திருக்கிறது.
பஞ்சத்தால்...
பட்டினியால்...
நிலநடுக்கத்தால்...

◈ குளோரிசக்தி

இனி நான் மனிதனல்ல.

வலிகளின் மேலாக ஒரு கம்பளிப்பூச்சி நகர்கிறது
அதன் கால்களின் தடங்களில்
நிரம்பி ததும்புகிறது குருதி
சொட்டும் குருதியில்
உங்களது போலித்தனம் அங்காங்கே அப்பியிருக்க
வெளியேறுகிறேன்
உறவுகளை உடைத்து.
இனி நான் மனிதல்ல
பறவை.
சிறகுகளை விரித்து அமேசன் வரை
செல்லப்போகிறேன்
என்னை கோபிக்கவோ
என்னை நொந்துகொள்ளவோ
எனக்கு வலி தரவோ
என் உளச் சதைகளை கீறிக்கிழிக்கவோ
இனி உங்களுக்கு வாய்ப்பில்லை.
ஏன் என்றால்
நான் மனிதல்ல.
பறவைகளுக்கு காயப்படுத்தவோ
பழி சொல்லவோ தெரியாது.
என்னை விடுங்கள் பறவையாகவே
வாழ்ந்து விடுகிறேன்.

◈ ஜே.பிரோஸ்கான்



ஒரு முறையோ
இரு முறையோ
என்னை நன்கு வதைத்துக் கொள்ளுங்கள்
விடியலுக்கு இன்னும் சில நாழிகைகளே
இருக்கின்றன
என்னை ரசித்த நாள்மீன் கூட்டங்களெல்லாம்
கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கிவிட்டது
நான் இரசிப்பதற்கும் வருந்துவதற்கும்
இங்கே என்ன இருக்கிறது
நீங்கள் என்னை இரசித்தலையும் வதைப்பதையும்
தவிர...

◈ **கருவை ந.ஸ்டாலின்**

பேராவலில் பேசிய
ஆசைகள் எல்லாம் கைவிடப்பட்ட அநாதையாய்
இன்னும் காத்திருக்கின்றன....

கோப்பை மாற்றி
குடிக்க விரும்பிய தேநீர்
தோள்கள் உரச
நடக்க விரும்பிய கடற்கரை

பார்த்து கொண்டே
பாட விரும்பிய பாடல்
தொட்டுக் கொண்டே
சொல்ல விரும்பிய கதைகள்

ஈர மணலில்
எழுத விரும்பிய கவிதை
அருகில் அமர்ந்து
நுகர விரும்பிய ஜாதி மல்லி

அழுது கொண்டே
பிரிய விரும்பிய காதல்
அணைத்து கொண்டே
அழ விரும்பிய மோதல்

ஓரக் கண்ணில்
பார்க்க விரும்பிய ஒய்யாரம்
தெரியாது பட்டது போல்
விரும்பி செய்யும் சிருங்காரம்

பேராவலில் பேசிய
ஆசைகள் எல்லாம் கைவிடப்பட்ட அநாதையாய்
இன்னும் தான் காத்திருக்கின்றன....

◈ **கே.பாலன் வடக்கத்தியான்பட்டி**

# கெட்ட கடவுள் நல்ல சாத்தான்



எல்லையில்லாத
இந்த வானத்தில் தினந்தோறும்
ஏதோ ஒரு மூலையில்
அழுகிறதே இந்த மேகம்,
அதே போல் தான் எனது காதலும்..

இயற்கைக்கு புறம்பாக
எனது கனவு உலகில் இருக்கும்
அனைத்து நட்சத்திரங்களும்
நிலவாகவே வாழ ஆசைப்படுகிறது..

ஐந்து நொடி முன் பிறந்த
குழந்தை தனது தாயை
இழந்தது கூட தெரியாமல்
பசியில் மார்பை தேடுவது போல்
நானும் தேடுகிறேன் பல முறைகள்
உடைந்த இதயத்தோடு..

ஒவ்வொரு முறையும் எனது
காதலைப் பொழிகிற
நேரமெல்லாம்,
ஆகயாத்துக்கும் பூமிக்கும்
இருக்கிற தூரத்தை
உணர்த்துகிறது..

இனி அழிவே இல்லாத
இந்த ஆகாயத்தில்
தேவதையின் சிறகுகள் கொண்ட
ஒரு பறவை,ஒரே பறவை,
பறந்து கொண்டிருக்கும்..
குறுகிய நாட்களில்
தானாகவே சிறகுகளை உடைத்து
கூட்டில் அடையப்போகிறது..

வெட்ட வெளிச்சத்தில் எரியும்
மெழுகுவர்த்தியிலிருந்து ஒழுகுவது போல்
ஒழுகுகிறது இந்த வாழ்க்கை..

இவ்வளவு குழப்பத்திலும்
மூளையோ கெட்ட கடவுளாகவும்
மனமோ நல்ல சாத்தானாகவும்
இருக்க ஆசைப்படுகிறதுஞ்

◈ அம்பேத்கர் கிட்டு



கடலில் மிதந்து
மீன்பாடி வண்டியில் ஏற்றப்படும்
சடலமெங்கும்
மீன்களின் கண்கள்
முளைத்திருப்பதுபோல் தெரிகிறது.
போர்த்திய நிலையில்
வேகமெடுக்கும்
மீன்பாடிக்குள்ளிருக்கும் உடலை
கடைசியாய் ஒருமுறை
எட்டிப்பார்த்துக்கொள்கிறது கடல்.
இதே போன்று
தங்கள் முன்னோர்களை
தினமும் ஏற்றிச்செல்லும் வாகனத்தை அலைகளின்
மேல் எழும்பி
மீன்கள் சபிக்கின்றன.
எனினும்
இறந்த அம்மனிதனுக்காக
கடல்
தன் தரப்பில் சேர்த்துக்கொள்கிறது
இன்னுமோர் துளி
கரிப்பை...

◈ **சந்துரு ஆர் சி**

எழுதிக்கொண்டிருந்த பேனாவை
திடீரென என்னிடமிருந்து பிடுங்கி
இருட்டுக்குள் வீசிவிட்டது இருட்டு

கண் தெரியாத இருட்டுக்குள்
எங்கே சென்று விழுந்ததோ
தெரியவில்லை
மின்மினிப்பூச்சிகள்
தேடிக்கொண்டிருக்கின்றன

என் ஏமாற்றத்தைப் பார்த்து
ஓடி வந்த ஏராளமான நட்சத்திரங்களும்
தேடிக்கொண்டிருக்கின்றன

தேடித்தேடிக் கிடைக்கவேயில்லை
இருட்டின் முகத்தில்
அத்தனை கள்ளத்தனம்
இருளுக்குள் எல்லாமே
இருட்டென்கிறது இருட்டு

அந்தப் பேனாவுக்குள்
வெளிச்சமிருக்கிறது என்பது
இருட்டுக்குத் தெரியவில்லை

◈ **சௌவி**

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

# அம்மையார் ஹைறுநூன்பீவி நினைவு
# சிறுகதைப் போட்டி



## முடிவுகள் விரைவில்

நடுவர்

**எழுத்தாளர் நாஞ்சில் நாடன்**

(சாகித்திய அகாதமி விருதாளர்)